மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி ஆதிதிராவிட மக்கள் அவர்கள் குடிசை போட்டு இருக்கின்ற இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு முன்பு மாற்று இடம் தேடி தரப்படுமா என்று கேட்கிறார்கள் நியாயமான கேள்வி. அரசு அந்த பரிசீலிக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேயும் 25 ஆண்டுக்காலமாக மேய்ச்சல் நிலம், அது போன்று புல்லவாரி போன்ற இடங்களில் எல்லாம் குடியிருக்கிறார்கள். அவர்கள் பட்டா கேட்டு எங்களை தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடியேறிவிட்டு உடனடியாக பட்டாக்களைக் கேட்பது இப்போது ஒரு வாடிக்கையாக மாறி கொண்டிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் யாரும் ஆக்கிரமிப்பு செய்து குடிசைகளைப் போட்டால் நிச்சயம் அனுமதிக்கப்போவதில்லை என்பதை மட்டும் அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமுதி தாலுகாவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்தல்.

*3830. திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கமுதி தாலுகாவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது சேர்த்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்துடன் சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(9-20 மணி.)

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் தேவர் திருமகன் அவர்கள் பிறந்த ஊர் பசும்பொன் கமுதி வட்டத்திலே இருக்கிறது. அதை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது மக்களுடைய கருத்தாக இருக்கின்ற காரணத்தினாலே இதை அரசு பரிசீலனை செய்து பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே கமுதி வட்டத்தைச் சேர்த்துக்கொள்ளும் அறிவிப்பை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுக்காவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை என்று முன்னரே குறிப்பிட்டேன். காரணத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்ப்பதைப் பற்றிய செய்திக்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை. அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு நன்கு ஆய்வு செய்து பரிந்துரை செய்யப்பட்டதன் அடிப்படையிலேயே இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், காமராஜர் மாவட்டம் என்று மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. எனவே தற்போது பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலனை செய்ய வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மூன்று மாவட்டங்களையும் பிரிக்கின்ற நேரத்தில் அவசர அவசரமாக பிரிக்கப்பட்டதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அகில இந்திய அளவிலே மிகப் பெரிய செல்வாக்கு பெற்ற தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந் தலைவர் காமராஜர் போன்றவர்களுக்கு எல்லாம் அவர்கள் பிறந்த ஊரிலே அவர்கள் பிறந்த ஊர் சேர்ந்திருக்கின்ற மாவட்டத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. தலைவர் தேவர் திருமகன் அவர்களுக்கு மட்டும் அவருடைய ஊர் வேறொரு மாவட்டத்திலும் அவருடைய பெயர் வேறொரு மாவட்டத்திற்கும் வைக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். இதை தயவுசெய்து அரசு மறுபரிசீலனை செய்து அந்த பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே அவர் பிறந்த ஊராக இருக்கின்ற பசும்பொன் சார்ந்திருக்கின்ற கமுதி வட்டத்தைச் சேர்க்கக்கூடிய பரிசீலனையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அவசர அவசரமாக எந்தக் காரியத்திலும் ஈடுபடுவதில்லை. மாறாக செய்ய வேண்டிய காரியங்களைத் துரிதமாகச் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும். உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். அதுதான் விடை, அதற்கு மேல் விடையில்லை.

திரு. பி. என். வல்லரசு : துணைத் தலைவர் அவர்களே, தேசிய தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த ஊரும், வளர்ந்த ஊரும், அடக்கம் செய்யப்பட்ட ஊரும் பசும்பொன் கிராமம் ஆகும். அப்படிப்பட்ட அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற பசும்பொன் நகர் என்பது ஒரு இடத்திலும் தேவர் திருமகன் என்ற பெயர் வேறொரு இடத்திலும் இருக்கின்ற காரணத்தினால் மீண்டும் கமுதி தாலுக்காவை, பசும்பொன் கிராமம் உள்ளிட்ட கமுதி தாலுக்காவை தேவர் திருமகனுடன் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. இப்படி, பசும்பொன் கிராமம் ஒரு இடத்திலும், தேவர் திருமகன் என்ற பெயர் வேறொரு இடத்திலும் இருப்பதால் நீர் இல்லாத ஆறாக, தெய்வம் இல்லாத ஆலயமாக காட்சியளிப்பதாக பொதுமக்கள், தேவர் திருமகனுடைய லட்சோப லட்ச மக்கள் கருதுகின்ற காரணத்தினால், மீண்டும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் அவசர அவசரமாக முடியாவிட்டாலும் கூட ஆர அமர சிந்திந்து அந்த பசும்பொன் கிராமத்தைச் சேர்க்க வேண்டுமா, வேண்டாமா என்பதை உணர்ந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, கேள்விக்குப் பதிலாக சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய உறுப்பினருக்கு எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆர அமர அரசு ஆராயும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : துணைத் தலைவர் அவர்களே, பசும்பொன் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இரண்டும் அண்மையில் பிரிக்கப்பட்டது. முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே மாவட்டப் பிரிவினையின் போது மண் வளம், மன வளம் இரண்டும் ஒரே மனத்துடையதாக இருப்பதால் இரண்டுக்கும் நடுவிலே ஒரு தலைநகரத்தை அமைக்கலாம் என்ற கருத்தை ஏற்கெனவே சொல்லியிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு மாவட்டம் இரண்டாம் பிரிக்கப்பட்டுவிட்டது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காதர்பாட்சா அவர்கள் சொன்னதைப் போல இளையாங்குடி தாலுக்கா, திருவாடானை

தாலுக்கா இரண்டும் மக்களுடைய எண்ணங்களுக்கு மாறாக சிதைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(9-25 மணி)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் பேசும்போது மக்களின் உணர்வுகளை இந்த அரசு சிதைத்து விட்டதைப் போன்ற கருத்துப்படப் பேசினார்கள். அந்த எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. மேலும் ஆராய்கின்ற வாய்ப்பு உருவாகுமானால், அரசு ஆராயத் தவறாது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

ஒரகடம் கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலம்.

*4238 திரு. எஸ். எஸ். தென்னரசு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், அம்பத்தூர் நகரியத்தைச் சேர்ந்த ஒரகடம் கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக்கொண்ட நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) மேற்கண்ட கிராமத்தில் சர்வே எண். 610-1பி, 2பி, 3-பி ஆகிய நிலங்கள் சட்ட விரோதமாக ஒரு தனி யாருக்கு வழங்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், அம்பத்தூர் நகரி யத்தைச் சேர்ந்த ஒரகடம் கிராமத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக்கொண்ட நிலத்தின் பரப்பளவு 12,076 ச.மீ. ஆகும்.